--------------------------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 அபிப்பிராயம்

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தினதும் அதன் நிருவாகத்தினதும் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்று நான் கருதுகின்ற எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் நிதிக் கூற்றுகளின் ஊடாக 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்-கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்தின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 சட்டம், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

| | சட்டம், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ----------------- | --------------------- | ----------------------- | ------------- |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு ஒழுங்குவிதிகள் கோவை | | | |
| i. | நிதி ஒழுங்குவிதி 261(3) | காசேட்டில் போதியளவு பணம் இல்லாமை காரணமாக கொடுப்பனவுகளை குறிப்பு வைத்தல் அல்லது காசோலை எழுதப்படாமல் இருத்தல் வேண்டுமாயினும், அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளாமை காரணமாக மீளாய்விற்கான ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா. 4,834,607 தொகை காசேட்டில் எதிர்மறை பெறுமதி காணப்பட்டது. | எமது வங்கி பணத் தொகையில் கொடுப்பனவு அளவை பூர்த்தி செய்வதற்காக நிதி வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது டன், மீளாய்விற்கான காலப்பகுதியில் NIBM அதன் மேலதிக பற்று வசதி பயன்படுத்த-வில்லை என்பதுடன், NIBM கடும் நிதிக் கட்டுப்பாடுகளை | நிதி ஒழுங்குவிதிகள் பிரகாரம் நடவடிக்கை மேற்-கொள்ளுதல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பராமரித்துக்கொண்டு நிதி ஒழுங்குவிதி 261 (3) நிதி நடவடி-க்கைகளுக்கு அமை-வாக தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல். | |
| ii. | நிதி ஒழுங்குவிதி 756 | எல்லா அரசாங்க நிறுவனங்களாலும் வருடாந்த பொருட் மீளாய்வு மேற்கொள்ளுதல் வேண்டுமாயினும், நிறுவனத்தால் 2022 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக பொருட்டு மீளாய்வு மேற்கொள்ளப்படவில்லை. | இந்த ஆண்டில் ஒப்பாய்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதி ஒழுங்குவிதிகள் பிரகாரம் நடவடிக்கை மேற்-கொள்ளுதல் வேண்டும் |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/ 2021 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை வழிகாட்டல் கோவையில் 2.2.5 பிரிவு, தொழில்பாட்டு கைநூலின் 7.7 பிரிவு மற்றும் 2023.04.19 ஆம் திகதி கணக்காய்வாளர் அதிபதியை விழிக்கப்பட்ட அரச தொழில்முயற்சி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | நிருவனத்தின் கம்பெனியான தேசிய தொழில்முயற்சிகள் முகாமைத்துவ கல்வி நிறுவனக் கம்பெனியின் முதலீடுகள், நிதியிடல், பங்கு இலாபம் மற்றும் மனிதவளங்கள் கொள்கைகள் என்பன உள்ளடக்கி கொள்கை சட்டகம் திட்டமிடல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு தயாரிக்கும் வரை திறைசேரி சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றை ஏற்புடையதாக கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் தாய் கம்பெனியால் மேற்கொள்-ளுதல் மிகவும் பொருத்த-மானதென காண்பிக்கப்-பட்டிருப்பினும், அதன்படி நடவடிக்கை மேற்கொள்ள-ப்படவில்லை. | அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை 1/2021 இன்படி நிருவாகக் கம்பெனியின் கொள்கை சட்டகம் தயாரித்தல். | தொடர்புடைய சுற்றுநிருபங்கள் மற்றும் வழிகாட்டல்கள் படி நடவடிக்கை மேற்கொள் ளுதல் வேண்டும். |

**1.6 நிதி முகாமைத்துவம்**

| | | | |
|---|---|---|---|
| (அ) | தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தால் தேசிய வியாபார முகாமைத்துவ கல்விக் கல்லூரியில் முதலீடு செய்திருப்பினும், ரூபா.மில்லியன் 800 தொகையிலான பணத் தொகைக்காக 2017 ஆம் ஆண்டு தொடக்கம் எந்தவொரு பயனும் கிடைத்திருக்கவில்லை. | தேசிய வியாபார முகாமைத்துவ கல்விக் கல்லூரியின் கடனிறுக்கக்கூடிய (Solvency Test) பரிசோதனையின் போது அந்த நிறுவனம் பங்கிலாபம் செலுத்தக் கூடிய மட்டத்தில் இல்லை என்று தேசிய வியாபார முகாமைத்துவ கல்வி நிறுவனத்தின் | பயன்படுத்திய மூலதனத்திற்கு போதியளவு நலன் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | துணைவேந்தரால் 2022.03.14 ஆம் திகதிய கடிதம் மூலம் நிரல் வரிசை அமைச்சின் செயலாளர் மற்றும் எமக்கும் பிரதிகள் சகிதம் அறிவிக்கப்படுதல். | |
| (ஆ) 2021 திசெம்பர் 02 ஆம் திகதி நடைபெற்ற பொது தொழில்முயற்சிகள் தொடர்பான செயற்குழு சபையில், தேசிய வியாபார முகாமைத்துவ கல்விக் கல்லூரியின் பங்கிலாபம் செலுத்தாமை தொடர்பாக இறுதி தீர்மானம் மேற்கொள்ளுதல் மற்றும் இந்த இரண்டு நிறுவனங்களின் நடத்தை மற்றும் கட்டமைகளின் மேற்பார்வைக்காக நிபுணத்துவ சபை நியமிக்குமாறு குழுவால் பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் கட்டளை வழங்கப்பட்டி-ருப்பினும், அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை | பொது தொழில்முயற்சிகள் தொடர்பான செயற்குழு சபையின் கட்டளைகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா.248,837,523 இலாபம் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் இலாபம் ரூபா.837,737,921 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா.588,900,398 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு நேரடி செலவினம் ரூபா. 275,808,886 ம், நிருவாக செலவினம் ரூபா. 428,417,999 ம் ஆன அதிகரிப்பு பிரதான காரணங்களாகின.

### 2.2 விகிதாசார பகுப்பாய்வு

கம்பெனி, கடந்த ஆண்டில் 17.29% ஆன தேறிய இலாப விகிதாசாரம் உழைத்துக்கொண்டிருப்பினும், மீளாய்விற்கான ஆண்டில் 4.36 % வரை குறைவடைந்திருந்தது.

**3. தொழில்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தால் கட்டிட-ங்களை நிருமாணிக்-கப்பட்டு கற்கை-நெறிகளை பராமரிக்க-ப்படும் கொழும்பு மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் அமைந்-திருக்கும் 02 காணி-களின் பொருட்டு 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் ரூபா.மில்லியன் 85 ஐ செலுத்தப்பட்டிருப்பினும், 2023 யூலை 15 ஆம் திகதி வரை இந்தக் காணிகளில் உரிமை கையேற்க-ப்படவில்லை. | காலி நிலையம் அமைந்துள்ள காணி தொடர்பில் காலி கடவத்சத்தர பிரதேச செயலகம், காணி ஆணையாளர் நாயகம் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையுடன் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் போது, குறித்த காணிகளின் உரித்துகளை சீராக்குவதற்கு இணக்கம் தெரிவிக்க-ப்பட்டுள்ளது. அதன்படி எதிர்வரும் மாதத்தில் அதாவது செப்தெம்பர் மாதமாகும்போது, குறித்த காணியின் உரிமை தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்திடம் பெற்றுக்கொள்-வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>கொழும்பு தலைமை அலுவலகம் தாபிக்கப்பட்டுள்ள காணி தொடர்பில், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்துடன், நடவடிக்கைகளை மேற்கொண்டு உரிய கையேற்புகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிமை கையேற்பதற்கு துரிதமாக செயற்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 02 ஆம் திகதி நடைபெற்ற அரச தொழில்முயற்சிகள் தொடர்பான செயற்கு-ழுவால் கணக்காய்வாளர் அதிபதியின் அவதானி-ப்புகளை மீளாய்வு செய்து முகாமைத்துவ திணைக்களத்துடன் இணைந்து ஊக்குவிப்பு படி கணக்கிடுவதற்காக ஏற்றுக்கொள்ளக் கூடிய முறைமை தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்ப-ட்டிருப்பினும், 2023 யூலை 15 ஆம் திகதி வரை அந்தப் பணி முடிவுறுத்தப்படவில்லை. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் வருமான வரி கணக்கிடும்போது ஆதாரமாகக் கொண்டுள்ள வருமானம், ஊக்குவிப்பு படி கணக்கிடுகையில் பயன்படுத்தியுள்ளதுடன், அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பரிந்துரைக்கமைவாக முகாமைத்துவ சேவைகள் திணைக்ளம் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ள முறைமைக்கமைவாக ஊக்குவிப்பு படி கணக்கிடுதல். | அரச தொழில்-முயற்சிகள் தொடர்பான செயற்குழுவில் பரிந்துரைகளின் படி செயற்படல் வேண்டும். |

### 3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேசிய வியாபார முகாமைத்துவ கல்வி நிறுவனத்தின் உள்ளக தொழில்பாட்டு நடவடிக்கைகளை நிருவகிப்பதற்காக 2016 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் தயாரித்து, 2021 ஆம் ஆண்டு பெப்ருவரி 18 ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்ட போதிலும், பயன்பாட்டில் உள்ள நிதி மற்றும் கணக்கீட்டு தொழில்பாட்டு கைநூலுக்காக தாய் கம்பெனியின் அனுமதி வழங்கப்படவில்லை. | கம்பெனியின் உறுப்புரை பிரகாரம் கம்பெனியின் பணிப்பாளர் சபைக்கு அங்கீகரிக்கும் முழு அதிகாரம் உள்ளது. அதேபோன்று தாய் கம்பெனியின் பணிப்பாளர் சபையும் கம்பெனியின் பணிப்பாளர் சபையை பிரதிநிதித்துவம் செய்கின்றது. | தாய் கம்பெனியின் அனுமதி பெற்றுக்-கொள்ளுதல் வேண்டும். |